
மட்டக்களப்பு
சூழல்
விழிப்புணர்வு
மாசிகை.

# சூழல் சுடர்

ஆனி, ஆடி - 1994 ✶ ''மன்று'', 16, புனித மிக்கேல் வீதி, மட்டக்களப்பு. ✶ 18, 19



மட்டக்களப்பு மாவட்டச் சூழல் மகத்துவம் விளக்கப்படவும், சூழலிலுண்டாகும் தாக்கங்களை வெளிக்கொணரவும் ''சூழல் விழிப் புணர்ச்சி மன்றம்'' இவ்விதழை மாதம் ஒருமுறை விரிக்கிறது.

அன்னை பூமி தன்னைக் காக்க
அகிலம் ஒன்று கூடுதற்காய்
மண்ணின் நாளாய்
சித்திரை தன்னை
மாந்தர் நினைத்தார்
பொன்னாளாய்
வாழும் சூழல் பாழாய் மாற
மாழும் மனிதன்
விரைந்தெழுந்தான்
வீழும் சூழல் தன்னைக் காக்க
தினமாம் ஆனி
மாதங்கொண்டான்.

# திரவப் பசளை

— யோ. இ. கிறிஸ்ரோபர் —

**து**ரிதகெதி, கடுகதி, றொக்கற் யுகம் என்ற ரீதியில் தமது செயற்பாடுகளைப் புரியும் மனிதன், விவசாயியாய் இருந்தாலும் சரி, வேறு தொழில் புரிபவராக இருந்தாலும் சரி, பண்டைக்கால முறைகள் சிறந்தவை என நாம் வாதாடும்பொழுது, அது ஆமை வேகம், நமக்குச் சரிப்பட்டு வராது என்று கூறுவான். இதேபோன்று செயற்கைப் பசளையின் செயற்பாட்டிற்கு ஏறத்தாழச் சமன்படும் வகையிலான, காலம் தாழ்த்தாத இயற்கை உரத் தயாரிப்பு முறை அறிமுகப்படுத்தல் அவசியம் என்ற முறையில் திரவப் பசளை தயாரிக்கும் முறை இங்கே கொடுக்கப்படுகின்றது.

பயிர் வளரும் பருவத்தில் பயிர் உணவு விரைவாகப் போதிய அளவு கிடைக்கவேண்டும் என்பதே திரவப் பசளைத் தயாரிப்பின் நோக்கம் இதனைக் கூட்டுப் பசளையைவிட விரைவாகத் தயாரிக்க முடியும்.

**செய்முறை**

1. உமி அகற்றிய கோழி உரம்.
   ஆட்டெரு, மாட்டெரு
   தகரக் கொள்கலன்
   உறுதியான சாக்கு
   உறுதியான தடி, கயிறு
2. சாக்கை எருவினால் நிரப்பி, வாயைத் தடியுடன் சேர்த்து நன்றாகக் கட்டல்வேண்டும்.



3. கொள்கலனில் நீரை நிரப்பி அதனுள் எரு நிரப்பிய சாக்கைத் தடியில் தூங்கிக்கொண்டிருக்கும் நிலையில் வைத்து மூடியினால் மூடிவிடவும்.



4. முதல் மூன்றாம் நாளும், அதன்பின் ஒன்றைவிட்டொரு நாளும் எரு நிரப்பிய சாக்கை நீரில் அலசவேண்டும்.

[2ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்புகள்

## உள்ளடக்கம்


திரவப் பசளை ... 1
திரு. யோ. இ. கிறிஸ்ரோபர்
மண் பாதுகாப்பு ... 3
செல்வன் செ. தயானந்த்
மண் பாதுகாப்பு ... 3
செல்வி நே. கேரளாதேவி
வட்டமிடும் விஞ்ஞான உலகினிலே சுற்றி நிற்கும் சூழல் மாசுக்களே ... 4
செல்வன் பி. உமாச்சந்திரன்
தேன் தமிழில் பாடிடுவோம் ... 4
திரு. கா. நடராஜா
கூடிய பயிர் விளைவிற்குக் கூட்டுப்பசளை ... 5
திரு. பா. பரசுராமன்
போட்டிகளின் தொகுப்புரை ... 6
செல்வி கு. ஜசிந்தாறோஸ்
மண்ணைக் காப்போம் அது எம்மைக் காக்கும் ... 8
செல்வி ந. சர்மிளா
மண் வளத்தைப் பேணுவோம் ... 10
செல்வன் பொ. ரவிந்திரன்
மண்முனை வடக்குக் கழிவகற்றல் நடவடிக்கைகள் 12
செல்வி அ. யோகராணி
இப்படியும் ஒரு பிரச்சினை ... 12
திரு. மனோ இராஜசிங்கம்
சமூகக்காடு வளர்ப்புத்திட்டம் ... 13
திரு. யோ. இ. கிறிஸ்ரோபர்
இலுப்பை மரங்கள் இன்னும் இன்னும் தேவை மில்லவைற் வெளியிடு ... 13
இம்மாதச் செய்திகள் ... 14


### திரவப் பசளை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

5. 15ஆம் நாள் நீர் கருநிறமாக மாறியிருக்கும் எருவில் இருந்து பயிர் உணவு நீரில் கலந்து இருப்பதனால் நீரில் இருந்து சாக்கை வெளியே எடுக்கவும்.

6. கொள்கலனில் இருக்கும் திரவப்பசளையுடன் 1:2 என்ற விகிதத்தில் நீர் சேர்த்துத் தாவரங்களின் இலை தவிர்ந்த பகுதிகளுக்கு விசிறும் கருவியால் விசிறவும்.

திரவப் பசளை மேல்மண்ணை வளமாக்குவதுடன் தாவரங்களுக்கு உதவும் நுண்ணங்கிகளின் வளர்ச்சியை ஊக்குவிக்கின்றது. ஊட்டச்சத்துக்கள் நீரில் கரைந்துள்ளதால் நீருடன் தாவரங்களுக்கு உணவு இலகுவாகக் கிடைக்கின்றது. இதனால், தாவரங்கள் நன்றாகச் செழித்து வளரும். ❀

## வெளியீட்டுக் குழு


**சுடரின் தூண்டுகோல்:**
மனோ. இராஜசிங்கம் } மன்று
யோ. இ. கிறிஸ்ரோபர் }

**நெறிப்படுத்துனர் குழு:**
அ. யோகராணி }
க. லீலா } மன்று
கு. ஜசிந்தா }

**ஆசிரியர் குழு:**
கா. நடராசா
(சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்)
நி. ஜெயராஜா
(சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்)
எஸ். கணேஸ்வரன்
(கிழக்குப் பல்கலைக்கழகம்)
எம். இராஜேந்திரம்
(புனித திரேசா மகளிர் வித்தியாலயம்)
ஜி. ஸ்ரீநேசன்
(இந்துக் கல்லூரி, மட்டக்களப்பு)
வி. இராமச்சந்திரா
(குறுமண்வெளி சிவசக்தி வித்தியாலயம்)
கே. ரதிச்சந்திரிகா (தடாகம், சந்திவெளி)
சோ. சுந்தரமோகன்
(கோல்ட்பிஸ் விளையாட்டுக் கழகம், நாவலடி)
எம். கலைமோகன் (பொதுஜன அபிவிருத்தி மன்றம், சித்தாண்டி)


### உங்கள் கவனத்திற்கு:

''சூழல் சுடர்'' ஒரு மாதாந்த வெளியீடு. இதனைத் தொடர்ந்து பெற விரும்புவோர் எம்முடன் தொடர்புகொள்ளவும்.

சந்தா விபரம்:
12 மாதம் - ரூ. 60/-
06 மாதம் - ரூ. 30/-
03 மாதம் - ரூ. 15/-
தனிப்பிரதி - ரூ. 5/-

காசோலை, மணியோடர், போஸ்ரல் ஓடர் யோ. இ. கிறிஸ்ரோபர் பெயரில் எடுக்கவும்.

### பாடசாலை அதிபர்களுக்கு:

பாடசாலைக்கு அனுப்பப்படும் ''சூழல் சுடர்'' மாணவர்களுக்குக் கிடைப்பதில்லை என நாம் அறியவருகின்றோம். இக்குறையை நீக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைச் சுடர்

1994, ஏப்ரல் 22ஆம் திகதி மண் காப்புத் தினத்தை முன்னிட்டு 'மன்று' கல்வித் திணைக்களத்தின் அநுசரணையுடன் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடாத்திய கவிதைப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்ற கவிதைகள்.

### ஆண்டு 9 - 11, 2வது இடம்

பெயர் : செல்வன் செ. தயானந்த்
பாடசாலை : மட் / மெதடிஸ்த மத்திய கல்லூரி.
ஆண்டு : 9.

## மண் பாதுகாப்பு

இயற்கை அன்னை எமக்களித்த
இனிய கொடையாம் மண்வளத்தை
புதுக்கி உயர்த்தி மெருகூட்டி
பொருளைப் பெருக்கி இன்புறுவோம்!

பூமித்தாயின் பிள்ளைகளாம்
பூரித்தெங்கும் மரம், செடிகள்
சாமி தந்த செல்வமடா
தறித்து வீழ்த்தல் பாவமன்றோ!

மண்ணுக்குள்ளே செல்வமெல்லாம்
மலிந்து கிடக்கும் விந்தைகள் பார்!
மண்ணைக் கொத்தி வாழ்ந்திடுவோர்
வையமெங்கும் கொள்ளையடா!

மண்ணில் விளையும் தானியங்கள்
உண்டு நிதமும் களிக்கின்றோம்!
இன்றே மண்ணின் வளம் காப்போம்!
இல்லை நாளை நாம் தவிப்போம்!

மண்ணின் அரிப்பை நாம் தடுக்க
புல்லை வளர்ப்போம் புவி காப்போம்!
கண்ணாய் மண்ணை நாம் பேணின்
கவலை பறக்கும் களி பிறக்கும்!

கடலின் அலைகள் மண் எடுக்கும்
கவலை ஒழிக்கக் கரையோரம்
கருங்கற்கள் குவிப்போம்; மண்காப்போம்!
கரும்பாய் இனிக்கும் வாழ்வமைப்போம்!

இயற்கை தந்த இலைகுழைகள்
இட்டு மண்ணைப் புரட்டிடுவோம்!
வியக்கும் வண்ணம் மண்வளத்தை
விரைந்து காத்துப் பயன் பெறுவோம்!

மரங்கள் நடுவோம்; வளம் வளர்ப்போம்;
மண்ணின் பெருமை நாம் உரைப்போம்;
சுரங்கள் உயர்த்திப் பாடுபட்டு
கண்ணாம் வாழ்வில் கனி குவிப்போம்!

நெல்லு விளைவது மண்ணாலே!
நெய்யும் துணிகளும் மண்ணாலே!
இல்லம் அமைவதும் மண்ணாலே – இங்கு
எல்லாம் கிடைப்பது மண்ணாலே!

இத்தனை தருகின்ற இன்புவியை
எப்படியாகினும் காத்திடுவோம்!
சத்திய தேவதை மண் என்று
சாற்றி அதை நிதம் போற்றிடுவோம்!

### ஆண்டு 12 – 13, 2வது இடம்

பெயர் : நே. கேரளாதேவி
பாடசாலை : மட் / பெரியகல்லாறு மகா வித்தியாலம்.
ஆண்டு : 13.

## மண் பாதுகாப்பு

ஐம்பெரும் பூத இயற்கையிலே நிலம்
முன்பதம் முக்கிய நன்பதமே
மன்பதை மற்றுயிர் அத்தனைக்கும் துணை
மண்வளம் என்பதில் மாறில்லையே!

கெட்டவர்க்கும் நலம் இட்டளிக்கும் அந்த
தத்துவத்தின் பொருள்தந்து காட்டும்
அட்ட ஐஸ்வர்யமும் அள்ளித்தரும் மண்ணை
வெட்டுவோன் தன்னையும் தாங்கி நிற்கும்.

பச்சைப் பசேல் என்ற சோலை வளங்களும்
பார்வைக்கு எழில்தரும் பாலை வனங்களும்
பயனைத் தரும் நல்ல பயிர் வகையும் தந்து
வறுமை போக்கி இன்பம் தந்துதவும் மண்ணே வாழ்க!

உச்சிவான் தட்டும் உயர்ந்த மலைகளும்
ஓடிச் செல்லும் நதி ஊற்றுக்களும்
ஓடி வரும் நீரிலிருந்து மக்களைப் பாதுகாக்கும்
பள்ள மேடுகளும் தந்து உதவும் மண்ணே வாழ்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் உறைவிடம் மாரி கோடைகாலம்
    தக்க நிழலும் தரும் உணவும்
பக்குவமாய் மக்கள் பகிர்ந்துண்ணத் தந்திடும்
    பாரில் மண் வளத்தைப் பேணிடுவோம்!

மண்வளம் இல்லையேல் எவ்வளம் இங்குண்டு?
    மக்கள் இதனை மதித்து நல்ல
பண் வளமூட்டி மண் பாதுகாத்து வாழ்ந்தால்
    நன்வளம் நாடு பெற்றோங்கி வரும்!

வானின்றுலகம் வழங்கிடும் மழை
    தானமுதமாக்கித் தருவதற்கும்
ஊனுக்குரமூட்டி உழைப்புக்குதவி நல்
    ஞானத்தையும் தரும் மண்பரப்பே!

நல்லவர் கெட்டவர் கற்றவர் மற்றவர்
    எல்லவரும் சமம் என்று நின்று
உள்ளவை யத்தனையும் கொடுத்தின்புறும்
    உத்தமத் தாயவள் மண் தரையே!

சூழல் சுற்றுப்புற மண்நிலம் மக்களுக்
    காவலைத் தந்திட வேணுமென்று
சாலை சந்து பொந்து சமனிலம் மற்றவை
    மாசுபடுவதை மாற்றிடுவோம்!

விஞ்ஞான சாதனை நுண்ஞான போதனை
    மெய்ஞான ஆத்தும ஞானிகட்கும்
எஞ்ஞானமும் தந்து இகபர சுகத்துக்கு
    நல்ஞானம் தருவது நன்னிலமே!

மண்ணழகென்னும் மணத்தைப் பரப்பிடும்
    வண்ண வண்ண மலர்ச் சோலைகளும்
உண்ண உண்ணச் சுவையூறும் கனிகளும்
    எண்ணி எண்ணித் தரும் மண்வளமே வாழ்க!

தங்கம் பொன் வெள்ளி தகரம் இரும்பு மண்
    தந்திடும் பொக்கிஷ பூமியிது
எங்கும் பயன்பெறும் எண்ணெய் வளங்களும்
    ஈயம் நிலக்கரி ஈன்றிடும் மண்ணே என்றும் வாழ்க!

மக்களுக்கென்றும் கைமாறு கருதாது
    தக்கவை யாவும் நமக்களித்து
பக்குவமாய் நம்மைப் பாதுகாத்து வரும்
    பாருலக மண்ணே வாழியவே!

எம் பாவங்களைத் தாங்கிவரும் மண்ணே
    சாதிமத இனமொழி பாராது நடுநிலை நின்று
பாதுகாக்கும் மண்ணே அன்றும் இன்றும் என்றும்
    எம்மை விட்டு விலகாமல் நீடூழிகாலம் வாழ்க!

---

## வட்டமிடும் விஞ்ஞான உலகினிலே சுற்றி நிற்கும் சூழல் மாசுக்களே

வட்டமிடும் விஞ்ஞான உலகினிலே
    சுற்றி நிற்கும் சூழல் மாசுக்களே!
எத்தனையோ விண்வெளிக் கலங்களினால்
    வீணாகி வருகின்ற நச்சுக்களே!

பறந்து வரும் ஆகாயப் பறவைகளே!
    நீரினிலே நீந்திவரும் இயந்திரமே!
வீதியினில் தவழ்ந்து வரும் வாகனமே!
    நீயும் வீணாய் வாயுவினை வெளியிட்டாயே!

நீரின்மேல் நீந்திவரும் நீர்ப் பறவைகளே
    கசிவதுண்டோ உன்னிடத்தில் எண்ணைத்துளி
உந்தன் மேலில் வரும் நச்சுகொண்ட புகையும்கூட
    அழித்திடுமே நாம் வாழும் உலகினையும்!

மனிதா! வீணறிவால் காடுகளை அழித்திடுவீர்
    உண்டாகும் துயரையும் ஏற்றிடுவீர்
மழையில்லாமல் இருந்துவரும் மாணிடத்தில்
    மேலும் மழையில்லாமல்
        ஆக்கிடுவாய் உன்னறிவால்!

— பி. உமாச்சந்திரன்,
மட் / சிவானந்தா வித்தியாலயம்.

## தேன் தமிழில் பாடிடுவோம்

கழிவுகளும் சேறுகளும்
    கரும்புகையும் தூசிகளும்
விழிகாணா விஷவாயும்
    சூழலுக்கு எதிரிகளாம்!

மரழிவும் மண்ணழிவும்
    மண்சரிவும் வரட்சியதும்
சுரந்துவரும் வெள்ளமதும்
    மனிதனுக்கும் பேரழிவாம்!

உலகமிதை உணர்ந்ததுவாம்
    காரணமும் தெரிந்ததுவாம்
அலட்சியம்தான் பெருகிடுதாம்
    அதையுணர்ந்து சுடர்வருதாம்!

என்று இதை அறியாயோ
    எந்தனுயிர் கண்மணியே
மன்றுவுக்கு வாழ்த்துக்களைத்
    தேன் தமிழில் பாடிடுவோம்!

— கா. நடராஜா, ஆரையம்பதி 3.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய பாடம்

## கூடிய பயிர் விளைவிற்குக் கூட்டுப் பசளை

(பா. பரசுராமன், SAFE)

**கூட்டுப்பசளை என்றால் என்ன?**

தாவர மீதிகள், மிருகங்களின் கழிவுப்பொருட்கள் என்பவற்றை பகுதிபட சிதைவடையச்செய்து பெறப்படும் பசளை கூட்டுப்பசளையாகும்.

தோட்டங்களில் இருந்து அகற்றப்படுகின்ற தாவர மீதிகள் (இலை, குழை, புல், காய்ந்த இலைகள்,) அறுவடையின் பின் உள்ள பயிர் மிகுதிகள் (வைக்கோல்), மிருகங்களின் கழிவுப்பொருட்கள் (சாணம், சிறுநீர்,) தோட்டத்திற்கு அருகாமையிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய இலை, குழைகள் (கிளிசரியா, பூவரசு, காவிழாய்,) சமையலறையிலிருந்து பெறப்படுகின்ற கழிவுகள் (மரக்கறிக் கழிவுகள், பிழிந்த தேங்காய்ப்பூ, சாம்பல்) என்பவற்றையும் கூட்டுப்பசளை தயாரிக்கப் பயன்படுத்தலாம். பொலித்தின், தகர ரின்கள், இறப்பர்த் துண்டுகள் போன்றவற்றையும், இலகுவில் சிதைவடையாத பொருட்களையும் கூட்டுப்பசளை தயாரிக்கப் பயன்படுத்தக்கூடாது.

**கூட்டுப்பசளை ஏன் அவசியம்?**

மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும் போன்றே பயிர்களின் வளர்ச்சிக்கும் போஷணை அவசியம். பயிர்கள் தமக்குத் தேவையான போஷணைப் பொருட்கள் பலவற்றை நிலத்திலிருந்தே பெற்றுக்கொள்கின்றன. ஒரு தோட்டத்தில் தொடர்ச்சியாகப் பயிர் செய்யும்போது தரையிலிருந்து போஷணைப்பொருட்கள் தொடர்ச்சியாக அகற்றப்படுகின்றன. இதனால், மண் வளம் குறைகின்றது. இவ்வாறு இழக்கப்படும் போஷணைப் பொருட்களை மீண்டும் வழங்குவதற்காகப்பசளை இடப்படுகின்றது. விவசாயிகள் தமது பயிர்களுக்கு யூரியா, மியூரியேற்றுப் பொட்டாசியம், சுப்பர் பொஸ்பேற்று போன்றவற்றை இடுகின்றனர். அண்மைக்காலத்தில் இரசாயனப் பசளைகளின் விலைகள் பெருமளவில் அதிகரித்துள்ளன. இவற்றைத்தவிர்த்து பயிர்களுக்குத் தேவையான போஷாக்கினை கூட்டுப்பசளைகள் இடுவதன் மூலம் குறைந்த செலவில் வழங்கலாம். இப்பசளையின் உபயோகத்தை அதிகரிப்பதற்குரிய நேரம் வந்து விட்டது.

**கூட்டுப்பசளை ஏன் சிறந்தது?**

★ பொதுவாக பயிர்களுக்கு இடப்படுகின்ற இரசாயனப்பசளைகள் பிரதான தாவரப்போஷாக்குப் பொருட்களாகிய நைதரசன் (N), பொஸ்பரஸ் (P), பொட்டாசியம் (K) என்பவற்றை மட்டுமே வழங்குகின்றன. ஆனால், கூட்டுப்பசளை இத் தாவர போஷணைப் பொருட்களுடன் தாவரங்களுக்கு அவசியமான ஏனைய போஷணைப் பொருட்களையும் வழங்குகின்றன.

★ கூட்டுப்பசளை மண்ணில் காற்றோட்டத்தை அதிகரிக்கின்றது மண்ணில் வாழும் நுண்ணுயிர்களுக்கு போதியளவு காற்று கிடைப்பதனால் அவை நன்கு தொழிற்பட்டு பயிர்களுக்குத் தேவையான போஷணைப் பொருட்களைக் கிடைக்கச் செய்கின்றன.

★ கூட்டுப்பசளை இடப்படும்போது மண், தன்னகத்தே போஷணைப்பொருட்களை தங்க வைத்திருக்கும் அளவு அதிகரிக்கின்றது.

★ கூட்டுப்பசளை இடப்படும்போது மண் துணிக்கைகள் இறுக்கமாக பிடித்து வைக்கப்படுகின்றதனால் மண்ணரிப்பு ஏற்படுவது குறைக்கப்படுகின்றது.

★ கூட்டுப்பசளை இடப்படும்போது மண் அதிகளவு நீரைத் தன்னகத்தே பிடித்து வைத்திருப்பதனால் பயிர்களுக்குக் கிடைக்கும் நீரின் அளவு அதிகரிக்கின்றது.

★ இரசாயனப் பசளைகள் இடும்போது பயிர்களைப் பாதிக்கின்ற விளைவுகள் மண்ணில் ஏற்படலாம். ஆனால், கூட்டுப்பசளை இடப்பட்ட மண்ணில் இவ்வாறான விளைவுகள் ஏற்படுவது குறைவு.

★ கூட்டுப்பசளை நாம் வாழும் சூழலைப் பாதிப்பதில்லை.

**கூட்டுப்பசளையைத் தயாரிப்பது எப்படி?**

இப்பசளையை மூன்று முறைகளில் தயாரிக்கலாம்.

1. குவியல் முறை
2. குழியல் முறை
3. விரைவு முறை

**1. குவியல் முறை :**

ஈரவலயத்திற்கும், உலர்வலயத்திற்கும், மழைக்காலங்களுக்கும், மணற்தரைகளுக்கும் உகந்தது.

**2. குழியல் முறை :**

உலர்வலயத்திற்க்கும், மழை குறைந்த நாட்களிலும் இம்முறையைப் பயன்படுத்தலாம்.

[11ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போட்டிகளின் தொகுப்புரை

மண் காப்புத் தினத்தையும் (ஏப்ரல் 22), உலக சூழல் தினத்தையும் (ஜூன் 5) நினைவு கூர்ந்து மன்று நிறுவனம் மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சி ஏற்பட வேண்டும் என்னும் பரந்த நோக்குடன் பாடசாலைகளுக்கிடையே கல்வித் திணைக்களத்தின் அநுசரணையுடன் கவிதை, கட்டுரை, விவாதப் போட்டிகளை நடாத்தியது. மண் காப்புத் தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையே கவிதை, கட்டுரைப் போட்டிகளும், உலக சூழல் தினத்தை முன்னிட்டு பாடசாலை ஆசிரியர்களுக்கிடையே விவாதப் போட்டியும் நடாத்தப்பட்டன.

### கவிதை, கட்டுரைப் போட்டிகள் (மாணவர்க்கானது)

| பிரதேச செயலகம் | பிரதேச செயலகங்களில் உள்ள மொத்த பாடசாலைகள் (அண்ணளவாக) | போட்டிகளில் பங்குபற்றிய பாடசாலைகள் கவிதை | போட்டிகளில் பங்குபற்றிய பாடசாலைகள் கட்டுரை |
|---|---|---|---|
| கோறளைப்பற்று மேற்கு | 15 | 3 | 2 |
| கோறளைப்பற்று வடக்கு | 15 | 1 | 1 |
| கோறளைப்பற்று | 32 | 3 | 2 |
| ஏறாவூர்ப்பற்று செங்கலடி | 37 | 3 | 5 |
| ஏறாவூர் நகரம் | 10 | — | 2 |
| மண்முனை மேற்கு | 18 | — | — |
| மண்முனை வடக்கு | 43 | 6 | 8 |
| காத்தான்குடி | 16 | 2 | 3 |
| மண்முனைப்பற்று | 16 | 3 | 4 |
| மண்முனை தென்மேற்கு | 13 | — | — |
| மண்முனை தென் எருவில் பற்று | 28 | 4 | 6 |
| | 243 | 25 | 33 |

ஏறாவூர் பற்றைச்சேர்ந்த மட்/ஆறுமுகத்தான் குடியிருப்பு கலைமகள் வித்தியாலயம் 29 கட்டுரைகளை அனுப்பி வைத்தது குறிப்பிடத்தக்கது.

### விவாதப் போட்டி (ஆசிரியர்களுக்கானது)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறக்குறைய 243 பாடசாலைகள் இருந்தும் 24 பாடசாலைகள் மட்டும் போட்டியில் பங்குபற்ற முன் வந்தன.

| பிரதேச செயலகம் | பங்குபற்ற முன்வந்த பாடசாலைகள் |
|---|---|
| கோறளைப்பற்று மேற்கு | 2 |
| கோறளைப்பற்று | 2 |
| ஏறாவூர்ப்பற்று | 2 |
| மண்முனை மேற்கு | 2 |
| மண்முனை வடக்கு | 5 |
| காத்தான்குடி | 1 |
| மண்முனைப்பற்று | 2 |
| மண்முனை தென் எருவில் பற்று | 8 |
| | 24 |

பிரதேச மட்ட விவாதப் போட்டிக்கு மண்முனை வடக்கிலும், மண்முனை தென் எருவில் பற்றிலும் மாத்திரம் இவ்விரண்டு பாடசாலைகள் பங்குபற்றின. ஏனைய 6 பற்றுக்களிலும் இருந்து மாவட்ட மட்டப்போட்டிக்குப் போட்டியின்றி பாடசாலைகள் தெரிவாகின. மாவட்ட மட்டப்போட்டிக்கு 8 பாடசாலைகள் போட்டியிட இருந்த போதிலும் 6 பாடசாலைகள் மட்டுமே போட்டியில் கலந்து கொண்டன.

மேற்படி கவிதை, கட்டுரைப் போட்டிகளில் ஒரு சில பாடசாலைகளின் மாணவர்களே ஆர்வத்துடன் பங்குபற்றினர். இதற்குத் தூண்டுகோலாக இருந்த பாடசாலைகளின் அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் எமது நிறுவனத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இனிவரும் காலங்களில் ஏனைய பாடசாலைகளின் அதிபர்களும், ஆசிரியர்களும், மாணவர்களும் போட்டிகளில் ஆர்வத்துடன் பங்கு கொள்வதை மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

இப் போட்டிகளுக்கு மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றியவர்களுக்கு எம் நிறுவனத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

| | |
|---|---|
| திரு. த. யுவராஜா (கல்வித் திணைக்களம்) | கட்டுரை |
| திருமதி. நி. ஜெயராஜா (உள்ளூராட்சித் திணைக்களம்) | கட்டுரை |
| திரு. ஆ. கதிரமலைநாதன் (உதவித் திட்டப் பணிப்பாளர்) | கட்டுரை |
| திரு. எஸ். யேசுதாஸ் (மலர் வேந்தன்) (சமூகத் தொடர்பு நிலையம்) | கட்டுரை |
| திரு. எஸ். குணரெட்ணம் (அமிர்தகழியான்) | கவிதை |
| திரு. திமிலை மகாலிங்கம் | கவிதை |

விவாதப் போட்டியிலும் ஒரு சில பாடசாலைகள் நேரம் தவறாமல் குறிப்பிட்ட நேரத்திற்கு வந்திருந்தன. இவர்களுடைய ஆர்வத்தை நாம் பாராட்டாமல் இருக்கமுடியாது. ஒரு சில பாடசாலைகள் போட்டியில் பங்குபற்ற முடியாமல் இருந்ததற்கான காரணத்தை கடிதம் மூலமாகவோ, நேரடியாகவோ தெரிவித்திருந்தன. இனிவரும் காலங்களில் ஆசிரியர்களுக்காக நடாத்தப்படும் போட்டிகளில் மாணவர்களுக்கு முன் மாதிரியாக ஆசிரியர்கள் ஆர்வத்துடன் கலந்து கொள்வார்கள் என ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

இப்போட்டிகளில் பிரதேச மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும் மத்தியஸ்தர்காளகக் கடமையாற்றியவர்களுக்கும் எமது நன்றிகள்.

திருமதி. சுபா சக்கரவர்த்தி (உதவிக் கல்விப்பணிப்பாளர், கல்வித் திணைக்களம், மட்டக்களப்பு)
திரு. எஸ். சிவபாக்கியராஜா (விவசாய அதிகாரி, விவசாயத் திணைக்களம், மட்டக்களப்பு)
திரு. கந்தசாமி (காணி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், மட்டக்களப்பு)
திரு. ஆ. அரசரெத்தினம்
திரு. பொ. கணபதிப்பிள்ளை (ஓய்வு பெற்ற அதிபர்)
திரு. மு. பற்பராசா (சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், மண்முனை தென் எருவில் பற்று)
திரு. எஸ். சண்முகநாதன் (அதிபர், மட்/நாவற்குடா தருமரெத்தினம் வித்தியாலயம்)
திரு. அ. செல்வேந்திரன் (பொறியியலாளர்)

ஏனைய பிரதேச மட்டங்களில் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்ற முன்வந்தவர்களுக்கும் எம் நன்றிகள்,

திருமதி. வி. யூ. முகைதீன் (ஆசிரியை, மட்/ஓட்டமாவடி பெண்கள் மகா வித்தியாலயம்)
திரு. ஏ. எம். அப்துல் காதர் (பிரதேச கல்வி அதிகாரி, ஓட்டமாவடி)
திரு. த. சிவநாதன் (ஆசிரியர், மட்/கிரான் மகா வித்தியாலயம்)
திரு. க. கிருஷ்ணபிள்ளை (ஆசிரியர், மட்/சந்திவெளி சித்தி விநாயகர் வித்தியாலயம்)
திரு. கா. சுப்பிரமணியம் (ஆசிரியர், மட்/கிரான் மகா வித்தியாலயம்)
திரு. ஞா. சிறிரங்கன் (ஆசிரியர், மட்/ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலயம்)
திரு. சி. சந்திரசேகரம் (ஓய்வுபெற்ற அதிபர், ஆரையம்பதி)
திரு. க. செல்லத்தம்பி ''ஆரையூர் இளவல்'' (கிராம சேவையாளர், ஆரையம்பதி)
திரு. காசுபதி நடராஜா (பிரதேச செயலகம், மண்முனை, ஆரையம்பதி)

விவாதப் போட்டிகள் நடாத்துவதற்கு இடங்கள் தந்துதவிய, தந்துதவ முன்வந்த பாடசாலை அதிபர்களுக்கும் பிரதேச கல்வி அதிகாரிகளுக்கும் எமது நிறுவனத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். மேலும் அரை இறுதி, இறுதி விவாதப் போட்டிகளை நடாத்துவதற்கு இடம் தந்துதவிய மட்/ ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபருக்கும், நிர்வாகத்தினருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகள். மேலும், சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய மட்டக்களப்பு கல்வித் திணைக்களத்தின் ஏனைய உத்தியோகத்தர்களுக்கும், நேரடியாகவோ மறைமுகமாகவோ ஒத்துழைப்பு நல்கியவர்களுக்கும் எமது நிறுவனத்தின் சார்பில் உளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் சுடர்

*1994, ஏப்ரல் 22ஆம் திகதி மண் காப்புத் திட்டத்தை முன்னிட்டு 'மன்று' கல்வித் திணைக்களத்தின் அநுசரணையுடன் பாடசாலை மாணவருக்கிடையே நடாத்திய கட்டுரைப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்ற கட்டுரைகள்.*

**ஆண்டு 9 – 11 1வது இடம்**

பெயர் : செல்வி ந. சர்மிளா
பாடசாலை : மட் / நாவலடி நாமகள் வித்தியாலயம்.
ஆண்டு : 11.

## மண்ணைக் காப்போம் அது எம்மைக் காக்கும்

உலகில் உள்ள அங்கிகள் யாவும் இப் புவியோட்டின் மேற்பகுதியான மண்ணிலே வாழ்கின்றன. தாவரங்களும் விலங்குகளும் வாழ்வதற்கு ஆதாரமாகவுள்ள புவியின் அதிமேல் ஓடு அல்லது கவசமே மண் எனப்படுகின்றது. மண்ணானது பாறைகள் சிதைவடைவதன்மூலமே தோன்றுகின்றது.

பாறைகள் சிதைவடையும் செயற்பாடானது ஒரு குறுகிய கால செயற்பாடு அல்ல. பல கோடி வருடங்கள் தொடர்ச்சியாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஒரு செயற்பாடாகும். பூமியின் மத்திய பகுதியானது 3,000°c வெப்பநிலையினைக் கொண்டுள்ளது. இவ் வெப்பநிலையில் உருகாத பொருட்கள் ஒன்றுமே இல்லை. புவியின் மத்திய பகுதி உருகிய தீக்குழம்பாகவே காணப்படுகின்றது எனலாம். புவியோட்டின் மெல்லிய பகுதிகளினூடாக புவியின் அகவிசை காரணமாக தீக்குழம்புகள் வெளித்தள்ளப்படல் எரிமலை எனப்படுகின்றது. இதனால் உண்டாகும் பாறைகள் தீப்பாறைகள் எனப்படும். பாறைகளில் அடையற்பாறை, உருமாறியபாறை என மேலும் பல வகைகள் உண்டு. இப்பாறைகள் சிதைவடைவதன் காரணமாகவே, மண் தோன்றுகின்றது.

மண் தோன்றும்போது தாய்ப்பாறையில் உள்ள கனிப்பொருட்களை அது உள்ளடக்கி இருக்கும். தாவரங்களின் வளர்ச்சிக்கு இக்கனிப்பொருட்கள் (மூலகங்கள்) மிகவும் அத்தியாவசிமானவையாகும். தாவரங்கள் வாழ்வதற்கு வேண்டிய எல்லா மூலகங்களையும் இம் மண்ணில் இருந்தே பெறுகின்றன. தாவரங்கள் மண்ணில் உள்ள கனிப்பொருட்களைப் பெற்று வளர்ந்து ஒளித்தொகுப்புச் செய்தே உணவைத் தொகுக்கின்றன. தாவரங்களின் இவ் உணவு சேமிப்புக்களை மனிதன் நம்பியுள்ளான். பழங்கள், கிழங்கு வகைகள், தானியங்கள், வித்துக்கள் என்பவை யாவும் தாவர உணவுச் சேமிப்பேயாகும். அவற்றை மனிதன் உணவாக உண்டு மகிழ்கின்றான். மண்ணில் இருந்து பெறப்பட்ட கனிப்பொருட்களைக் கொண்ட இவை யாவும் தொகுக்கப்படுகின்றன.

எனவே, மண்ணில் இருந்து தாவரங்களினால் உள்ளெடுக்கப்படும் கனிப்பொருட்களின் அளவு அதிகரிக்க அதிகரிக்க மண்வளம் குறைவதை அவதானிக்கலாம். இவ்வாறு இழக்கப்பட்ட அல்லது எடுக்கப்பட்ட கனிப்பொருட்களை மீண்டும் மண்ணிற்கு இடாவிடில் மண்ணானது வளமற்றதாக மாறுவதுடன், இம் மண்ணில் எந்தவொரு தாவரமும் வளர முடியாததாகிவிடும்.

தாவரங்களின் இலை குழைகள், அவற்றின் உடல்கள் என்பன இறந்து அழியும்போது மண்ணில் சேதனப்பொருட்கள் சேர்கின்றன. இதில், காபன், பொஸ்பரஸ், நைதரசன் போன்ற பல்வேறு மூலகங்கள் மீண்டும் மண்ணிற்குக் கிடைக்கின்றது. மற்றும், ஆடு, மாடுகளின் மலம், சிறுநீர், அவற்றின் இறந்த உடல்களும் மண்ணுடன் சேர்ந்து பிரிகையடைந்து அமோனியம் உப்புக்களை ($NH_4^+$)யும் யூறியா போன்றவற்றையும் மண்ணிற்கு வழங்குவதால் மண் வளமடைகின்றது. மண்ணில் இருந்து இழக்கப்படும் கனிய மூலகங்கள் மீண்டும் ஒரு வட்ட முறைக்கு உட்பட்டு மண்ணை வந்தடையாவிடில் இயற்கைச் சமநிலை பாதிப்படையும். மண்ணில் நடைபெறும் நைதரசன் வட்டம், காபன் வட்டம் என்பன இதற்கு ஓர் உதாரணமாகும்.

மேலும், மண்ணானது புவியின் மேற்பகுதியில் ஒரு மெல்லிய படையாகவே இருக்கின்றது. அதில் வளமிக்க மண் மிக மிகக் குறைவாகவே இருக்கின்றது. இவ்வளமான மண்ணின் பகுதிகள் மண்ணரிப்பின் காரணமாக எடுத்துச்செல்லப்படுவதனால் மண்வளம் குன்றுகின்றது. ஓடும் நீர், காற்று, விலங்குகளின் செயற்பாடு ஆகியவற்றினால் மண்ணரிப்பு ஏற்படுத்தப்படுகின்றது. இந்த மண்ணரிப்பின் காரணமாக வளமிக்க மேல்மண் எடுத்துச்செல்லப்படுவதுடன் மேலும் பல பாதிப்புக்கள் ஏற்படுவதை நாம் காணமுடிகின்றது.

மண்ணரிப்பை எவ்வாறு தடை செய்யலாம் என்ற வினாவுக்கு நாம் விடை காணவேண்டும். மண்ணில் தாவரங்கள் வளர்வதன் காரணமாகத் தாவர வேர்கள் மண்ணை இறுகப் பற்றிப் பிடித்திருப்பதனாலும் ஓடும் நீரின் அரிப்பின் காரணமாக மண்ணரிப்பு ஏற்படுவது மிகவும் குறைவாக இருக்

கும். எனவே, மண்ணில் மூடு தாவரங்களை வளர்த்தல் வேண்டும். இதற்குக் கல்பகோனியம், சென்றோசிமா, பியூரோரன்ஸ் போன்ற தாவரங்கள் மிகவும் பொருத்தமானவையாகும்.

கடற்கரைப் பகுதியில் வளரும் அடம்பன்கொடி போன்றவையும் காற்றால் ஏற்படும் மண்ணரிப்பைத் தடைசெய்கின்றது. மேலும், காற்றினால் பாலைவனங்களில் மண்ணரிப்பு ஏற்படுகின்றது. இங்கு மணல் குன்றுகளின் அசைவுகள் ஏற்படுவது சர்வசாதாரணமான நிகழ்வுகள் ஆகும். இலங்கைத் தீவானது கடலினால் சூழப்பட்டிருப்பதன் காரணமாகக் கடல் அரிப்பு ஏற்பட்டுக்கொண்டிருப்பதும் எமது நாட்டிற்கு ஓர் அச்சுறுத்தல் ஆகும். இதனால், நாட்டின் ஒரு பகுதியை நீர் உள்ளெடுத்துக்கொண்டிருக்கின்றது. எனவே, எமது மண்ணைப் பாதுகாப்பது மிக மிக அவசியமாகும்.

கடலில் உள்ள முருகைக்கற்கள் அகழப்படுவதன் காரணமாக கடலரிப்பு தீவிரமடைகிறது. இதனைத் தடுப்பதற்கு கடலில் உள்ள முருகைக்கற்களை அகழ்வதை நிறுத்தவேண்டும்.

கடற்கரையோரங்களின் காற்றுத்தடை வேலியாகச் சவுக்கு (கசுறினா) போன்ற மரங்களை நடுவதன்மூலம் காற்றினால் மண் அள்ளப்பட்டுச் செல்வதைத் தடை செய்யலாம்.

மண் வளத்தைப் பேணுவதில் தாவரங்கள் மிகவும் முக்கிய பங்கினை வகிக்கின்றன. அதாவது, ஒரு பாறையில் முதலில் வளர்வது இலைக்கண் ஆகும். இவை அல்காக்களுக்கும் பங்கசுக்களுக்கும் இடைப்பட்ட ஒரு வகையாகும். அதைத் தொடர்ந்து சிறிய தாவரங்கள் வளரத் தொடங்கித் தாவர வேர்கள் பாறைகளின் பிளவுகளிடையே சென்று பின்பு அவை வளரப் பாறைகள் சிதைந்து மண் உண்டாகின்றது.

மேலும், தாவர உடல்கள் இறந்து அழியும் பொழுது அங்கு மண் வளமடைந்து கூடியளவு மண் தோற்றம்பெறுகின்றது. எனவே, மண்ணைக் காப்பதற்கு மண்ணில் தாவரங்களை நாம் நடல்வேண்டும்.

தாவரங்களில் நடைபெறும் ஆவியுயிர்ப்புச் செயற்பாட்டின் காரணமாக மண்ணில் உள்ள கனியுப்புக்களும் கரை நிலை அடைந்து நீராவியுடன் சேர்ந்து ஆவியாக மாறி இலைகளில் அவை படிவாக இருப்பதனால் மழை பெய்யும்போது அம்மண்ணை அக்கனிப்பொருள் மீண்டும் அடைகின்றது. இதனால், மண்வளம் பேணப்படுகின்றது என ஆய்வுகள் கூறுகின்றன. எனவே, மரம் நடுவதன்மூலம் அது மண்ணை மேன்மேலும் வளப்படுத்த முடியும் எனலாம்.

இன்று விஞ்ஞான வளர்ச்சியின் பயனாக மண்ணை வளப்படுத்த இரசாயன உரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை வளமாக்கிகள் என அழைக்கப்படுகின்றன. இவை உடனடியாகப் பயன் தரக்கூடிய ஆங்கில மருந்துகளைப்போல் செயற்படும். ஆனால், மண்ணில் நீண்டநாட்கள் நிலைத்திருக்கமாட்டாது. அத்துடன் மண்ணின் இழையமைப்பு, கட்டமைப்பைத் திருத்தமாட்டாது, அதிகமாக இட்டால் தாவரம் இறந்துவிடும். இவற்றைவிட இயற்கைப் பசளைகளே மண் இழையமைப்பு, கட்டமைப்பைத் திருத்துதல், மண்ணில் நீர் பற்றுத்திறனைக் கூட்டுதல், மண்ணுக்குக் குளிர்ச்சியைக் கொடுத்தல் ஆகியவற்றைச் செய்கின்றன எனவே, மண் வளத்தை அதிகரிக்க செயற்கைப் பசளைகளை விட இயற்கைப் பசளைகளே சிறந்தவை. அத்துடன், இயற்கைப்பசளைகள் நீரை உறிஞ்சுவதால் மண்ணரிப்பையும் தடைசெய்யும்.

மண்ணின் ஆழம் இடத்திற்கிடம் வேறுபடுகின்றது. பெரும்பாலும் மேற்பரப்பிலே கனியுப்புக்கள் அதிகமாகக் காணப்படுகின்றது. மண்ணின் கீழ்ப்படையில் கனியுப்புக்கள் குறைவாகவே காணப்படுகின்றன. ஓடும்நீர், மழைவீழ்ச்சி என்பவற்றினால் வளமிக்க மேல்மண் கழுவி எடுத்துச் செல்லப்படுவதன் காரணமாக மண்வளம் குன்றுகின்றது. இதை மண்ணரிப்பு என்று அழைக்கின்றனர். மலைநாட்டுப் பகுதிகளில் மண்ணரிப்புச் செயற்பாடு தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இதைத் தடைசெய்வதற்காக படிமுறைப் பயிர்ச்செய்கை, மூடு தாவரங்களை வளர்த்தல், பீலிமேவு வடிகால்கள் அமைத்தல், சமவுயரக்கோட்டு வடிகால், கல்லணை கட்டுதல் போன்ற பல்வேறு செயற்பாடுகள் மூலம் மண்ணரிப்பைத் தடை செய்கின்றனர். இதனால், வளமிக்க மண்ணைப் பாதுகாக்கலாம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சத்துருக்கொண்டான், பிள்ளையாரடி, தன்னாமுனையை அண்டிய ஆற்றங்கரையோரங்களில் காணப்படும் கண்டல் தாவரங்களை வெட்டி அழித்தமையினால் அப்பகுதி ஆற்றரிப்பு ஏற்பட்டுள்ளது. இதைத் தடுப்பதற்காக பல நடவடிக்கைகளை அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற்கொண்டு வருகின்றன. மன்று நிறுவனத்தினால் இப்பகுதிக் காடுகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. எனவே, இப்பகுதி நிலப்பரப்பு ஆற்றரிப்பில் இருந்து பாதுகாக்கப்படுகின்றது எனலாம்.

மேலும் நாம் வாழும் சூழலில் உள்ள இயற்கைத் தாவர வளங்களை பாதுகாப்பதன் மூலம் மண்ணரிப்பைத் தடைசெய்யலாம். மண்ணின் வளம் மேம்படுத்தப்படும். மண்ணின் வளம் அதிகரிக்க பயிர்களின் உற்பத்தியும் அதிகரிக்கும். எமக்கு வேண்டிய உணவுத் தேவையும் தன்நிறைவு அடைவதுடன் மனித வாழ்வும் மேம்படுத்தப்படுகின்றது. எனவே, நாம் மண்ணைக் காப்போம்; அது எம்மைக் காக்கும். ✲

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு 12 – 13 1வது இடம்
பெயர் : செல்வன் பொ. ரவிந்திரன்
பாடசாலை : மட் / கிரான் மகா வித்தியாலயம்.
ஆண்டு : 13.

# மண் வளத்தைப் பேணுவோம்

புவியின் மேற்பரப்பில் இறுகாத, கடினமற்ற பொருட்களாலான வெளிப்படையே மண் ஆகும். மனிதனுக்குக் கிடைத்த இயற்கை அன்னையின் கொடையாக உள்ள மண் மனித வாழ்வில் முக்கியத்துவம் பெறுகின்றது. தாவரங்கள் வளர்வதற்கும், சிற்றுயிரினங்கள் தோன்றுவதற்கும் இதுமட்டுமல்லாது கனிப்பொருள் பெறும் இடமாகவும், விவசாயக் கைத்தொழில் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தும் இடமாகவும் மண் செயற்படுகின்றது எனலாம்.

மண் பல இடங்களிலும் பல்வேறு பட்டதாகக் காணப்படுகின்றது. பிரதேசங்களுக்கு ஏற்ப நிறத்திலும், தன்மையிலும், தோற்றத்திலும் வேறுபட்டுக் காணப்படுகின்றது. மிகச்சிறிய பாறையான மண் பயிர்ச்செய்கைக்கு இன்றியமையாததாகக் காணப்படுகின்றது.

மண் மாசுபடுவதற்கு மிக முக்கியமானது இயற்கைத் தாவர அழிப்பாகும். மனிதன் பல்வேறு நடவடிக்கைகளுக்காகக் காடழிப்பு என்னும் கொடூரச் செயலை செய்கின்றான். விறகு, வீட்டுத் தளபாடம் என்பவற்றிக்காகக் காட்டை அழிக்கின்றான். இது மாத்திரமன்றிப் பெயர்ச்சிப் பயிர்ச்செய்கைக்காகவும் காட்டினை அழிக்கின்றான். இதனால், மழைநீர் நேரடியாகத் தரையில் விழுகின்றது. மண்ணில் இருக்கும் போசணைப் பதார்த்தங்கள் நீரினால் எடுத்துச் செல்லப்படுகின்றது. காலநிலை இயல்புகள் பாதிப்படைகின்றன. இயற்கைத் தாவரம் இன்மையால் அப்பகுதியில் மழைவீழ்ச்சி குறைவடைகின்றது. வெப்பநிலை அதிகரிக்கின்றது. வரண்ட பகுதிப் பயிர்ச்செய்கை பாதிப்படைகிறது. காட்டுப்பகுதி விலங்கினங்கள் புகலிடம் இன்றியும், நீர் இன்றியும் கிராமத்தினுள் உட்பிரவேசிக்கின்றன. இவ்வாறு பல நடவடிக்கைகள் ஏற்பட மண்ணில் இருக்கும் இயற்கைவள அழிப்பு காரணமாகின்றது.

பெயர்ச்சிப் பயிர்ச்செய்கை ஓர் இடமாற்றுப் பயிர்ச் செய்கையாக உள்ளது. மண்ணில் இருக்கும் தாவரத்தை முற்றாக அழிக்கும் பயிராகவும் இருப்பதனால் இப்பயிர்ச் செய்கைக்கு அரசு தடை விதித்துள்ளது எனலாம். தற்போது இலங்கையில் 20%க்கும் குறைவான காடுகளே இருக்கின்றன என அறிக்கைகள் கூறுகின்றன. அதனால் இயற்கைத் தாவரத்தைப் பாதுகாக்க இலங்கை அரசு செப்டம்பர் பதினேழாம் திகதியை மர நடுகைத் தினமாகப் பிரகடனம் செய்துள்ளது. இவ்வாறான நடவடிக்கை அதிகரித்தால் வளமான நிலங்கள் தரிசாக மாறும் என்றும், எதிர்காலத்தில் குறள் வலயமாகப், பாலைவனமாக மாறும் எனப் பலர் அச்சம்கொள்கின்றனர்.

கனியவளம் அகழ்வதனாலும் மண் வளம் பாதிப்படைகின்றது. இலங்கையில் தென்மேற்குக் கடற்கரைப் பகுதி முருகைக் கல் அகழ்வினால் பாதிப்படைந்துள்ளது. பெரும்பாலான பகுதிகள் கடலினுள் சென்றுவிட்டன. இவ்வாறான நடவடிக்கை அதிகரித்தால் இலங்கை இன்னும் சிறிய தீவாகும். அம்பலாங்கொடையில் இருந்து தெவிநுவர வரை உள்ள பகுதி முருகைக் கல் அகழ்வினால் கடலினுள் செல்கின்றது. இதனாலே இதற்கெதிராக ஆயிரத்தித் தொள்ளாயிரத்தி தொண்ணூறாம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முலாம் திகதி இவ் அகழ்வுக்கு அரசு தடை விதித்துள்ளது.

இரத்தினக்கல் அகழ்விற்காக நிலத்தில் சுரங்கங்கள் வெட்டப்படுகின்றன. இரத்தினக்கல் எடுத்தபின் அது அவ்வாறே விடப்படுகின்றது. இதனால் மண்ணரிப்பு ஏற்படுகின்றது. மண்ணில் இறுக்கம் தளர்வடைகின்றது. இவ்வாறான நடவடிக்கைகளினாலே இரத்தினபுரி மண்சரிவுக்கு உட்படுகின்றது. பல உயிரினங்களை இழக்கவேண்டி ஏற்படுகின்றது. பெப்ரவரி மாத மண்சரிவினால் பலர் மாண்டதையும் நாம் அறிவோம். இதுமட்டுமன்றி இக் குழிகளில் நீர் தேங்குவதனால் மலேரியா போன்ற கொள்ளை கொண்ட நோய் ஏற்படக் காரணமாகின்றது.

நமது பிரதேசத்தில் பல்வேறு தேவைகளுக்காககளி மண் அகழப்படுகின்றது. இதனால், பல பகுதிகள் பயிர்ச்செய்கைக்கு உவப்பற்ற பகுதிகளாக மாறி வருகின்றன. அகழப்பட்ட பகுதிகள் பனியொருத்தேரி பிரதேசமாக மாறிவருகின்றது மணலை பல்வேறு தேவைகளுக்கு கடற்கரைப்பகுதிகளிலும் ஆற்றுக்கு அண்மித்த பகுதிகளிலும் அகழுகின்றனர். இதனால், இப் பகுதிகள் கடல்நீர், ஆற்றுநீர் பகுதிகளாக மாறிவருகின்றன. இவ்வாறான பல நடவடிக்கையால் மண்ணில் ஆற்றல் குறைவடைகின்றது.

இவ்வாறு மண் பல வகைகளிலும் தாக்கத்துக்கு உள்ளாவதனால் வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்றது. அதன் விளைவாக மண்ணின் பீஎச் (PH) பெரும் பாதிப்படைகிறது. வரம்புகள், வாய்க்கால்கள் சிதறல், நீர் நிலைகள் தூர்தல் போன்ற பல விளைவுகள் ஏற்படுகின்றன.

களைநாசினி, கிருமிநாசினி என்பவற்றை நிலத்தில் பாவிக்கும்போது மண் பல வகைத் தாக்கங்களுக்கு உட்படுகின்றது. மண்ணில் வாழும் நன்மை செய்யும் நுண்ணுயிரினங்கள் அழிக்கப்படுகின்றது. தற்போது கடற்கரையோர நீர்த்தாளைகளை அழிக்கும் செயலும் தொடர்ந்துள்ளது. இவ்வாறு

(11ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய பாடம்...

[5ம் பக்கத் தொடர்ச்சி]

3. **விரைவு முறை :**

இம்முறை எல்லா வலயங்களுக்கும் உகந்தது.

தயாரிக்கும் முறை :

★ இம்முறையில் மெதுமையான தாவரப்பகுதிகளும் மிருகக்கழிவுகளும் பயன்படுத்தப்படுகின்றன. பயன்படுத்தப்படும் பொருட்கள் அனைத்தும் சிறியவையாக இருக்கவேண்டும்.

★ முன்பு குறிப்பிட்ட பொருத்தமான இடமொன்றினைத் தெரிவுசெய்க.

★ சேதனப்பொருட்களை 6" உயரத்திற்கு இட்டு அதன்மேல் ஆரம்பக் கலவையை இடுக. இவ்வாறு மீண்டும் மீண்டும் இட்டுக் குவியல்களை அமைத்துக்கொள்க.

★ 6 அடி நீளம், 3 அடி அகலம், 3 அடி உயரமான குவியல்களை அமைக்கலாம். சேதனக் கழிவுப் பொருட்கள் குறைவாக இருந்தால் குவியல்களை சிறியதாக அமைத்துக்கொள்க.

★ களிமண்ணை நீருடன் கலந்து பெற்ற களிக்கரைசலினால் சகல பக்கங்களையும் பூசி இக் குவியலை மூடிவிடுக. அப்பொழுது குவியலினுள் வெப்பநிலை அதிகரித்து, கழிவுப் பொருட்கள் விரைவில் சிதைவடையும்.

★ இக்குவியலை 4 தடவைகள் புரட்டுதல் வேண்டும். அவையாவன,

1. குவியலிட்டு 2 நாட்களில் பின்பு
2. 1வது தடவையிலிருந்து 4 நாட்களின் பின்பு
3. 2வது தடவையிலிருந்து 3 நாட்களின் பின்பு
4. 3வது தடவையிலிருந்து 3 நாட்களின் பின்பு

★ ஒவ்வொரு தடவை புரட்டும்போதும் முதலில், வெளிப்பக்கமாக உள்ள களிமண் படையை அகற்றிய பின்பு குவியலைப் புரட்டவேண்டும். குவியலின் வெளிப்பக்கமாக உள்ள சேதனப் பொருட்கள் நடுப்பகுதிக்கும், நடுப்பகுதியில் உள்ள பொருட்கள் வெளிப்பகுதிக்கும் வருமாறு புரட்டுக. சேதனப்பொருட்களை 6" உயரமுள்ள தட்டுகளாக இட்டு ஒவ்வொரு தட்டுக்கும் இடையில் ஆரம்பக் கலவையை இடவேண்டும். பின்பு, களிமண் கலவையால் பூசிக் குவியலை மூடிவிடவேண்டும்.

★ குவியலை இட்டு 24 நாட்களின் பின்பு இதனைத் தாவரங்களுக்குப் பசளையாக இடலாம்.

**ஆரம்பக் கலவையைத் தயாரிப்பது எப்படி?**

22.5 கிலோ மாட்டுச் சாணம், 2.5 கிலோ அடுப்புச்சாம்பல், (முன்பு செய்த கூட்டுப்பசளை இருந்தால் அதனையும் சேர்க்கலாம்) என்பவற்றை 10 கலன் (45 லீற்றர்) நீரில் நன்கு கரைத்து ஆரம்பக் கரைசலைத் தயாரித்துக் கொள்ளலாம். தேவைப்படும் ஆரம்பக் கரைசலின் அளவிற்கேற்ப இப்பொருட்களின் அளவைக் கூட்டிக் குறைத்துக் கொள்ளலாம்.

**கூட்டுப்பசளையை இடும்போது கவனிக்கவேண்டியவை எவை?**

நிலப் பண்படுத்தலின்போது மண்ணில் பரவி இட்டு மண்ணுடன் கலந்துவிடுக. ஒரு ஹெக்டயர் நிலப்பரப்பில் 10 தொன் கூட்டுப்பசளை இடவேண்டும்.

நடுகைக்குழியில் நடும்போது கூட்டுப்பசளை, மேல்மண் என்பவற்றின் கலவையால் நிரப்பி விதைகளை இடலாம் அல்லது கன்றுகளை நடலாம். பல்லாண்டுப் பயிர்களாயின் மரத்தினடியில் கூட்டுப்பசளையை இட்டு மண்ணுடன் கலந்துவிடலாம். நீர் தேங்கி நிற்கும் தரைக்குக் கூட்டுப்பசளை இடக்கூடாது. நாற்றுமேடைகள் தொற்று நீக்கப்பட்ட பின்பே கூட்டுப்பசளை இடவேண்டும். மழையிருந்தும், நேரடிச் சூரிய வெளிச்சத்திலிருந்தும் கூட்டுப்பசளையைப் பாதுகாக்கவேண்டும். இதனால் நிலத்தின் வளத்தைப் பேணி, அதிலிருந்து கிடைக்கும் விளைவின் அளவைக் கூட்டுவதற்குக் கூட்டுப்பசளை நல்ல பயனளிக்கும்.

பல நாடுகளில் கூட்டுப்பசளை தயாரிக்கப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. குறைந்த செலவில் பெற்றுக்கொள்ளக்கூடிய இவ்வுரத்தை எதிர்காலத்தில் செய்து விவசாயிகள் மட்டுமல்லாது மற்றையவர்களும் பயனடைய முயலவேண்டும்.

## மண்வளத்தைப்......

(10ம் பக்கத் தொடர்ச்சி)

பல நடவடிக்கைகளாலும் பாதிப்படைவது மண்ணே என்றால் ஐயமில்லை.

இதனைக் கட்டுப்படுத்த அரசு பல நடவடிக்கைகளைத் திட்டவட்டமாக மேற்கொள்ளவேண்டும். மனிதன் தனது சூழலில் மரங்களை நடவேண்டும். இதற்காக அரசு பல கருத்தரங்குகளை நடாத்த வேண்டும். இன்று மர நடுகை சம்பந்தமான போதனைகள் இடம் பெற்றுவருகின்றன. மண்ணரிப்புப் பகுதியில் மண் வளத்தைப் பேண பல நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. சொன்றோ சிமா, சியூறேறியம் போன்ற மூடு பயிர்களை மண்சரிவு ஏற்படும் மலைப்பாங்கான பிரதேசத்தில் நட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

களியவள அகழ்வைக் கட்டுப்படுத்த பல திட்டங்கள் உருவாக வேண்டும். களி மண் என்பவற்றை கட்டுக்கோப்பாக, உத்தரவுடன் வழங்க ஆவன செய்யவேண்டும். பெயர்ச்சிப் பயிர்ச் செய்கையை தடைசெய்ய வேண்டும். இவ்வாறான பல நடவடிக்கைளை மேற்கொள்வதன் மூலமே மண் வளத்தைப் பேண முடியும். எதிர்காலத்தில் மனிதனது விருத்திக்கும், நாட்டின் விருத்திக்கும் மண்ணே இன்றியமையாதது எனக் கொண்டு அதை விருத்தி செய்வதன் மூலமே மனிதன் சகல வசதிகளுடன் வாழ முடியும். ''எனவே, மண் வளத்தைப் பேணும் முயற்சியை மேற்கொள்வோமாக''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ ஆய்வுச் சுடர் ★

# மண்முனை வடக்கு கழிவகற்றல் நடவடிக்கைகள்

— செல்வி அ. யோகராணி, மன்று —

**கோட்டமுனை - 1**

கோட்டமுனை ஒன்றிற்குள் 5 வட்டாரங்கள் உள்ளடக்கப்படுகின்றது. இங்கு ஒரு சில இடங்களிலேயே சன நெருக்கடி அதிகமாகக் காணப்படுகின்றது. இருப்பினும் கழிவுகள் அதிகமாகக் காணப்படும் இடங்களாக, மட்டக்களப்பு பொதுச் சந்தையும், மாடடிமுனையும் காணப்படுகின்றன.

சந்தையைப் பொறுத்தமட்டில் ஒவ்வொரு நாளும் இரண்டு தடவை கழிவகற்றல் வேலை நடைபெறுகின்றது. உபகரணப் பற்றாக்குறையும் வேலையாட்களின்மையும் காணப்பட்ட போதிலும் சிரமங்களைப்பாராது தம் கடமையை நிறைவேற்றுவதில் இப்பகுதித் தொழிலாளர்கள் மும்முரமாக உள்ளனர். இங்கு எடுக்கப்படும் குப்பைகளும் திருப்பெருந்துறையிலேயே கொட்டப்படுகின்றன. இப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு பாதிப்புக்கள் எதுவும் ஏற்படவில்லை.

மற்றும், மாடடிமுனையை நோக்கின் மண்முனை வடக்குப்பகுதிக் கடைகளிற்குரிய இறைச்சிகளைப் பெறுவதற்காக மிருகங்களை (மாடு) வெட்டும் செயல் இங்கு நடைபெறுகிறது. எந்தக் காரணம் கொண்டும் பசுக்களை வெட்ட அனுமதியில்லை. அப்படி வெட்டப்படுவதாயின் 12 வருடங்களுக்கு மேற்பட்ட பசுக்களையே வெட்டமுடியும். ஏனையவை 5 வருடங்களாகியவையே வெட்ட அனுமதியுண்டு. இருப்பினும் ஒரு சிலர் இவ் அறிவுறுத்தலுக்கு மாறான நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். அத்துடன் இவைகள் நோயற்றவை என்பதை அரசு தெளிவுபடுத்திய பின்பே மாடுகள் வெட்டப்படும். இங்கு கிடைக்கும் கழிவுகள் அருகில் உள்ள வாவிக் கரையிலேயே கொட்டப்பட்டது. கடந்த மூன்று வருடங்களாக இவையும் திருப்பெருந்துறைக்குக் கொண்டு செல்லப்படுகின்றன.

**கல்லடி**

நாவலடி தொடக்கம் காத்தான்குடி ஒன்று வரை உள்ளடக்கப்பட்டதாகக் கல்லடி சுகாதாரப் பகுதி காணப்படுகின்றது. இப்பகுதியில் தள்ளுவண்டிகள் மூலமும், உழவு இயந்திரங்கள் மூலமும் குப்பைகள் அகற்றப்படுகின்றன. இங்கு குப்பைகள் மிகக் குறைவாகக் காணப்படுகின்றது. பொதுமக்களில் பலர் தமது வீட்டு வளாகங்களிலேயே குழிவெட்டி இவற்றைப் புதைக்கின்றனர். சிலர் எரிக்கின்றனர். மற்றும் சிலர் கழிவுகளைப் பைகளில் பொதி செய்து தெருக்களில் வைக்கின்றனர். அவற்றைச் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் எடுத்துச் செல்வர். இப்பகுதிச் சுகாதாரப் பரிசோதகரைச் சந்தித்தபோது அவர் மூலம் ஒரு சந்தோஷமான விடயத்தை அறியமுடிந்தது. அதாவது, தொண்ணூற்றொன்பது வீதமான மக்கள் ஆணையாளரால் விடப்பட்ட அறிவுறுத்தல்களை ஏற்று தம் நகரத்தைச் சுத்தமாக வைத்திருக்கின்றனர். இது மிகவும் வரவேற்கத்தக்க ஒரு விடயமாகும்.

மற்றும், இங்குள்ள கழிவுகளைப் பயன்படுத்தி மட்/கல்லடி சிவானந்தா வித்தியாலயத்தினர் கூட்டுப் பசளையைத் தயாரிக்கின்றனர். இங்கு கல்லடி கடற்கரை, பூநொச்சிமுனை போன்ற பகுதிகளில் குப்பைகளை ஓரிடப்படுத்துகின்றனர். இப்பகுதியிலும் குறிப்பிடத்தக்களவு பாதிப்பெதுவும் ஏற்படவில்லை. ✿

## இப்படியும் ஒரு பிரச்சினை

திலாப்பியா என்னும் ஒரு நன்னீர் மீன் வகை ஆபிரிக்காவைச் சேர்ந்தது. இதன் இனப்பெருக்க வேகம் அதிகம், வளர்ச்சியும் அதிவேகம். ஆகவே, இவற்றைக் குளங்களில் வளர்ப்பதால் அதிகம் மீன்களை நாம் பெறலாம் என்பது கருத்து. உண்மை. ஆனால், மீன்களுக்குக் கிடைக்கக்கூடிய உணவு வகைகளை இவ்வினம் அதிகமாக உண்பதனால் மற்ற மீன் இனங்களைக் காலப்போக்கில் வேகமாக அருகச்செய்து இல்லாமலேயே செய்துவிட்டன. 1960களில் ஆபிரிக்காவில், இதன் பெருக்கம் ஒரு பெரிய பிரச்சினையையே கொண்டுவந்தது. எனவே, இவ்வினம் இந்தியாவில் தடைசெய்யப்பட்டுள்ளது. மனிதனுக்கு அதிக உணவு கொடுக்கக்கூடிய மீனினம் மற்ற மீன் இனங்களை வாழ விடுவதில்லை.

தொகுப்பு: மனோ இராஜசிங்கம்,

**Source: Down To Earth May 15, 1994.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகக் காடு வளர்ப்புத் திட்டம்

யோ. இ. கிறிஸ்ரோபர்

மட்டக்களப்பு மாவட்டத்தின் 70% மான மரங்கள் 1978ம் ஆண்டு ஏற்பட்ட சூறாவளியினால் அழிந்து போய்விட்டன. இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பசி, பட்டினி, வேலையில்லாத் திண்டாட்டம், மிகுதியான பெருமளவு மரங்களை வருமானத்தை நோக்கமாகக் கொண்டு, கட்டிடத் தேவைகளுக்காகவும், விறகுத் தேவைகளுக்காகவும் வெட்டப்பட்டன, இன்றும் வெட்டப்பட்டுக் கொண்டே இருக்கின்றன.

இயற்கைச் சூழலின் சமநிலை பேணப்படவும் அதேவேளையில் மக்களின் சுயதேவையைப் பூர்த்தி செய்யவும், மக்களினதும் மிருகங்களினதும் உணவிற்காகவும் தாவரங்கள் அவசியம் என்பது எல்லோராலும் உணரப்பட்டதொன்று. இதனைக் கருத்திற்கொண்டு எமதும், எமது பிற்கால சமுதாயத்தினதும் நன்மைகருதி, அருகிக்கொண்டு போகும் காட்டினை ஒரு குறிப்பிட்ட அளவு, மக்களின் பங்களிப்புடனும் அவர்களின் முகாமைத்துவத்துடனும் தரிசான நிலத்திலும், கடற்கரையை அண்டிய நிலத்திலும் சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டுள்ளோம்.

இத்திட்டத்தின் கீழ் கிராம மட்டத்தில் இருக்கும் சங்கங்களுடனும், மக்களின் குழுக்களுடனும் இணைந்து மரக்கன்றுகளை உற்பத்தி செய்து அவற்றை நாட்டி, அதில் வரும் பயன்களை அத்திட்டத்தில் ஈடுபட்டிருக்கும் மக்களே அனுபவிக்க முடியும்.

எனவே, இத்திட்டத்தில் ஈடுபட விரும்பும் யாவரையும் எம்முடன் தொடர்பு கொள்ளும்படி அழைக்கின்றோம்.

# இலுப்பை மரங்கள் இன்னும் இன்னும் தேவை

(ஆதாரம்:- மில்க்வைற் வெளியீடு)

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே நம்மவர் இலுப்பை மரத்தின் பயனை நன்கறிந்தனர். சங்ககாலப் புலவர்கள் இலுப்பைப் பூவை உவமேயமாகப் பாடியுள்ளார்கள். அது நாட்பூவாயிருக்கும் போது யானைத்தந்தத்தைப் போலவும் காய்ந்துலர்ந்த பொழுது இறால் கருவாடு போலவும் இருந்தது.

தமிழர் காய்ந்த பூவை வறுத்து இடித்து உண்டனர். அது பலவித நோய்களைப் போக்கியது. இலுப்பைப்பூக் கசாயம் மலேரியாவைப் போக்கும் எனக் கண்டுள்ளார்கள். இலுப்பை விதைகள் மிக அருமையான எண்ணெய் வித்து. இலுப்பெண்ணெய் வாத நோய்க்கும் பித்தவெடிப்புக்கும் தலைசிறந்த மருந்து. எண்ணெய் நீக்கிய சக்கை தலைசிறந்த ஔடதம். நல்லெண்ணெய் தேய்த்து நீராடுவோர் தேய்த்து முழுதும் அரப்பு உடம்பில் சொறி, சிரங்கு, தேமல், அழுக்கு எல்லாவற்றையும் நீக்கி மேனியை அழகாகவும் ஆரோக்கியமாகவும் காக்கிறது.

பண்டைக் காலத்தில் கிரேக்கர் இலுப்பையினத்து மரம் எனப்படும் ஒலிவ்விதைகளை நசுக்கி எண்ணெய் ஊற்றினார்கள். அதன் முதல் வடியை உணவாகக் கொண்டனர். உணவு தயாரிக்கவும் பயன் செய்தனர். இரண்டாம் வடியை மேனியில் பூசி நீராடித் தோலைப் பாதுகாத்தனர். அது சொறி, சிரங்கு, தேமல், கரப்பான் உண்டாகாமல் பாதுகாத்தது. மூன்றாம் வடியை விளக்கேற்றுவதற்குப் பயன் செய்தனர். இலுப்பெண்ணெய் விளக்கு கண்ணுக்குக் குளிர்மையாயிருக்கும். இலுப்பெண்ணெய் தடவி தோசை சுடுதல் மிகவும் நன்று.

இன்று வர்த்தக ரீதியில் இலுப்பெண்ணெய் நமக்கு அவசியம் தேவை. தேங்காய் எண்ணெய் ஏற்றுமதியாகியும், பற்றாக்குறையாகியும் விலையுயரும்போது கைகொடுக்க வருவது இலுப்பெண்ணெய்தான். சவர்க்காரஞ் செய்வதற்குப் போதிய தேங்காய் எண்ணெய் கிடையாத வேளையில் இலுப்பெண்ணெய் இன்றியமையாததாகி விடுகிறது.

இன்று தென்னிலங்கையிலிருந்து இலுப்பை விதைகளை எடுக்க முடியாமலிருக்கிறது. அங்கேயிருந்துதான் இலுப்பை விதை தொன் கணக்கில் எமக்குக் கிடைத்தது. காலநிலை காரணமாக அதுவும் இன்று தட்டுப்பாடாகிறது. இன்று அவசரம் அவசரமாக வெற்றுநிலங்கள், வீதியோரங்கள் எங்கும் இலுப்பை நடுவோம்! பயன் பெறுவோம்! நாட்டை இலுப்பை வளமாக்குவோம்! வாரீர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திச் சுடர்

★ மன்று, விவசாயத் திணைக்களத்துடன் இணைந்து சமநல அமைப்புகளுக்கு ''இயற்கை உரம், இயற்கைக் கிருமிநாசினி போன்றவற்றைப் பாவித்து அதிக விளைச்சலைப் பெறல்'' என்னும் தலைப்பில் வெகு விரைவில் பயிற்சிக் கருத்தரங்குகள் நடாத்தவுள்ளது.

★ இவ்வருட மரநடுகைத் திட்டத்திற்கான கன்றுகள் உருவாக்கப்பட்டுவருகின்றன. மரக்கன்றுகள் தேவையானோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

★ அருகிவரும் மர விதைகளும், பழமர விதைகளும் தேவைப்படுகின்றன. விதைகள் சேகரிக்கமுடிந்தோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

கண்டல் (கண்ணா), சமண்டலை, அசோக், இலுப்பை, தேக்கு, கத்தா, சவுக்கு, அக்கேசியா, பெரிய நெல்லி, பொன்னாவரை, கறிவேப்பிலை, அகத்தி.

★ விவசாயிகள், மீனவர்கள், வேறு சூழல் அபிவிருத்தியில் ஆர்வமுள்ளவர்களின் சொந்த அனுபவங்கள், பிரச்சினைகள் பற்றி எழுதவும். ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

★ இவ்வருட மரநடுகைத் திட்டத்திற்கான நாற்றுமேடைகளை அமைக்கத் தற்போது தெரிவுசெய்யப்பட்டுள்ள இடங்கள்,

| | | |
|---|---|---|
| மட்/ புதுக்குடியிருப்பு கண்ணகி வித்தியாலயம் | — | 9,000 |
| கிரான்குளம் விபுலானந்தர் இளைஞர் கழகம் | — | 5,000 |
| கிரான்குளம் இளைஞர் புனர்வாழ்வுக் கழகம் | — | 2,000 |
| கிரான்குளம் இளஞ்சுடர் விளையாட்டுக் கழகம் | — | 3,000 |
| குருக்கள்மடம் இளைஞர் கழகம் | — | 3,000 |
| ஆறுமுகத்தான் குடியிருப்பு கிராம சேவகர் | — | 4,050 |
| விநாயகர் கிராமம், சித்தாண்டி | — | 8,050 |
| சித்தாண்டி 3, 4, 5, கிராம சேவகர்களும், தனியாரும் | — | 18,000 |
| தடாகம், சந்திவெளி (5 கிராமங்களில்) | — | 14,025 |
| மொத்தம் | — | 66,125 |

சண்முகம் ஆசிரியா
வந்தாறுமூலை.

IND27. MR. K. SANMUGAM
TEACHER
NADUVIL THAMPI VEETHY
VANTHARUMOOLAI

"மன்று",
16, புனித மிக்கேல் வீதி,
மட்டக்களப்பு.

இப்பிரசுரம் மன்று இணைப்பாளர் யோ. இ. கிறிஸ்ரோபரினால் மட்டக்களப்பு செண். ஜோசப் கத்தோலிக்க அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Com. by S. Singarajah.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org